# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை- 2023

| தரம் : 11 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் II | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண் : ................................. | | மேலதிக நேரம் 10 நிமிடங்கள் |

- ❖ **அறிவுறுத்தல்**
- ❖ **முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

01) பின்வரும் சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

விவசாயப் பயிர்ச்செய்கை அதிகம் இடம்பெறும் வவுனியா பிரதேசத்தில் வசிக்கும் தயாளன் என்பவர் ‘தயா களஞ்சியம்’ என்னும் பெயரில் தானியங்களை விவசாயிகளிடமிருந்து பெற்று விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை ரூ 500000 மூலதனமாக இட்டு 01.01.2023 இல் ஆரம்பித்திருந்தார். அதே தினத்தில் வணிகத்தின் மேலதிக நிதித் தேவைக்காக ரூ 200000 வங்கிக் கடனை வருட வட்டி வீதம் 12% க்குப் பெற்றிருந்தார். மேலும் வணிகத் தேவைக்காக நகரின் மத்தியில் மாதாந்த வாடகை ரூ 10000 க்கு கட்டிடம் ஒன்றை பெற்றிருந்ததுடன் அலுவலக மற்றும் பொதியிடல் தேவைக்காக இரு ஊழியர்களை வேலைக்கமர்த்தியிருந்தார்.

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் வருமாறு

| | ரூபா |
|---|---|
| தானியங்கள் கொள்வனவு | 200000 |
| தானியங்கள் காசு விற்பனை | 300000 |
| தானியங்கள் கடன் விற்பனை | 50000 |
| தளபாடங்கள் கொள்வனவு | 60000 |
| மின்சாரக் கொடுப்பனவு | 10000 |
| சம்பளம் செலுத்தியது | 60000 |
| விநியோக வான் கட்டணம் | 30000 |
| வங்கிக் கடன் வட்டி செலுத்தியது | 1000 |

**மேலதிக தகவல்கள்**

- ➢ தளபாடங்களுக்கு வருடாந்தம் 10 % பெறுமானத் தேய்விடப்படல் வேண்டும்.
- ➢ 31.12.2023 இல் தானியங்களின் இருப்பு காணப்படவில்லை.
- ➢ கட்டட வாடகை 31.12.2023 வரை செலுத்தப்படவில்லை.

இலங்கை அரசு இரசாயன உரங்களுக்கான இறக்குமதிக்கு தடை விதித்தமை, காலநிலை சீரின்மை காரணமாக தானியங்களின் உற்பத்தியில் வீழ்ச்சிப் போக்குக் காணப்படுவதுடன் தானியங்களின் விலையும் அதிகரித்துச் செல்கின்றதை அவதானித்த தயாளன் எதிர்காலத்தில் இயற்கைப் பசளைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்தார்.

(i) (அ) குறிப்பிட்ட வணிகத்தால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?

(ஆ) மேற்குறிப்பிட்ட வணிகத்தை உரிமை மற்றும் நோக்க அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

(ii) (அ) தயா களஞ்சியத்தால் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பின்வரும் வளங்களுக்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக.

(1) மூலதனம்

(2) ஊழியர்

(ஆ) தயா களஞ்சியத்தின் பெயரினை பதிவு செய்ய வேண்டுமா? காரணம் தருக.

(iii) (அ) சூழல் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இனங்காணக்கூடிய பின்வரும் விடயங்களிற்கு வணிகத்திலிருந்து உதாரணம் தருக.

(1) வாய்ப்பு

(2) அச்சுறுத்தல்

(ஆ) மேற்படி சம்பவத்தில் இனங்காணக்கூடிய அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.

(iv) (அ) பின்வரும் முகாமைத்துவக் கருமங்களுக்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக.

(1) திட்டமிடல்

(2) ஒழுங்கமைத்தல்

(ஆ) தயா களஞ்சியத்தினை உற்பத்தி தன்மையடிப்படையில் எத்தகைய வணிகமாக கருதலாம்?

(v) 01.01.2023 இல் தயா களஞ்சியத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் தருக.

(vi) தயா களஞ்சியத்தால் பேணப்படும் முதன்மையேடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றிற்குரிய மூல ஆவணங்களையும் தருக.

(vii) தயா களஞ்சியத்தின் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பின்வரும் விடயங்களுக்கு உதாரணம் தருக.

(1) சொத்துக் கணக்குகள்

(2) பொறுப்புக் கணக்குகள்

(3) செலவினக் கணக்குகள்

(4) வருமானக் கணக்குகள்

(viii) தயா களஞ்சியத்தின் 31.12.2023 இல் காசு மீதியினைக் கணிப்பிடுக.

(ix) 31.01.2023 முடிவுற்ற மாதத்திற்கான தயா களஞ்சியத்தின் இலாப / நட்டத்தைக் கணிப்பிடுக.

(x) (அ) தயா களஞ்சியத்தின் நடைமுறைப் பொறுப்புகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

(ஆ) 31.01.2023 இல் தயா களஞ்சியத்தின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

## பகுதி 1 - (அ)

## வணிகக்கல்வி

**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.)**

02) (i) (அ) மனித தேவை என்றால் என்ன?

(ஆ) மனித தேவைகளின் இரண்டு குணாம்சங்களை எழுதுக.

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) வாகனங்களை சுத்திகரிக்கும் நிறுவனம் சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆகும். (...........)

(ஆ) வாடிக்கையாளர், வழங்குநர், போட்டியாளர் என்போர் அகச்சூழல் காரணிகள் ஆகும். ......( )

(இ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் சட்ட ஆளுமையுள்ள வணிக அமைப்புக்களாகும். (...........)

(ஈ) வாண்மைத் தொழில் புரியும் வணிகங்களுக்கு தனியுடைமை வணிக அமைப்பு பொருத்தமானதாகும். (...........)

(2 புள்ளிகள்)

(iii) $QR$ (Quick Response) விரைவு துலங்கல் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையில் மாதாந்த எரிபொருள் பாவனை 50% த்தால் குறைவடைந்தமையால் இறக்குமதி செலவு குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

(அ) மேற்குறிப்பிட்ட சம்பவத்தில் இனங்காணக்கூடிய சூழல் காரணிகளைக் குறிப்பிடுக.

(ஆ) சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிக அமைப்பின் பண்புகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

(iv) மாயவன் என்பவர் 'கிருஸ்ணா சாரதி பயிற்சி நிலையம்' என்னும் பெயரில் மோட்டார் வாகனங்களை செலுத்துவதற்கான பயிற்சிகளை வழங்கும் நிறுவனம் ஒன்றை நடாத்தி வருகின்றார்.

(அ) மேற்படி நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்படும் மனித தேவை யாது?

(ஆ) 'கிருஸ்ணா சாரதி பயிற்சி நிலையம்' பதிவு செய்யப்பட வேண்டுமா? காரணம் தருக.

(2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

03) (i) (அ) இலத்திரனியல் பண வகைகள் இரண்டு தருக.

(ஆ) காசோலை மூலமான கொடுக்கல் வாங்கலின் நன்மைகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) மக்கள் வங்கியில் நடைமுறைக்கணக்கினை ஆரம்பிக்க முடியாது. (...........)

(ஆ) சிறப்புமுறைக் குறுக்குக்கோடலின் போது வங்கியின் பெயர் காணப்படல் வேண்டும். (...........)

(இ) வணிகததின் அகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் பலம், பலவீனங்களை அறிந்து கொள்ள முடியும். (...........)

(ஈ) வணிகம் ஒன்றிற்கு உடல், உள உழைப்பினை வழங்குவோர் முயற்சியாளராவார்........... (...........)

(2 புள்ளிகள்)

(iii) பிரபல பாடசாலை ஒன்றின் அதிபரால் சாரண மாணவர்களின் பெற்றோர்களுக்கு மாணவர் பயிற்சி முகாம் தொடர்பான தகவலை வழங்கும் பொருட்டு விசேட கூட்டம் ஒன்று 25 ஆம் திகதி மார்ச் 2023 அன்று மாலை 3.00 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளதாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

(அ) மேலே தரப்பட்ட சம்பவத்தில் குறிப்பிடப்படும் தொடர்பாடலின் அடிப்படை மூலகங்கள் இரண்டினை எழுதுக.

(ஆ) மேலே (iii) (அ) இல் நீங்கள் குறிப்பிட்ட தொடர்பாடல் அடிப்படை மூலகங்கள் ஒவ்வொன்றுக்கும் சம்பவத்திலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

(iv) இலங்கையில் பின்னப்பட்ட ஆடைகளை தயாரிக்கும் ஐங்கரன் என்பவர் மலேசியாவிலுள்ள றொபின்சனுக்கு ஒரு தொகை ஆடைகளை கப்பல் மூலம் அனுப்பினார்.

(அ) இங்கு குறிப்பிடும் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளரைக் குறிப்பிடுக.

(ஆ) இதில் உள்ளடங்கியுள்ள போக்குவரத்து முறை தொடர்பில் போக்குவரத்து மூலகங்களான வழி மற்றும் ஊடகத்துக்கு உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

04) (i) (அ) சந்தைப்படுத்தல் கலவை மாறிகளைக் குறிப்பிடுக.

(ஆ) ஆயுள் காப்புறுதிக்கு பொருந்தாத தத்துவத்தைக் குறிப்பிடுக.

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) வணிகமொன்றில் வாடிக்கையாளர் தரமான பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கு அக்கறை செலுத்துவார். (...........)

(ஆ) இறுதி நுகர்வோருக்கு பொருட்களை விற்பனை செய்வது மொத்த வியாபாரம் ஆகும். (…….....)

(இ) விலை என்ற சந்தைப்படுத்தல் கலவை மூலமே வருமானம் உழைக்கும் தன்மை ஏற்படுகின்றது. (...........)

(ஈ) வரையறுத்த வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு வணிகமொன்றிற்கு முகாமைத்துவம் அவசியமாகவுள்ளது. (...........)

(2 புள்ளிகள்)

(iii) வணிகமொன்றின் சந்தைப்படுத்தல் முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்ட நான்கு நடவடிக்கைகள் பின்வருமாறு.

A - உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்காக வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்தல்.

B - தற்போதைய உற்பத்திப் பொருளின் வடிவத்தை மாற்றுவதற்கு தீர்மானித்தல்

C - வாடிக்கையாளருடன் சிறந்த உறவைப் பேணுமாறு விற்பனை ஊழியருக்கு அறிவுரை வழங்குதல்.

D - பிரேரிக்கப்பட்ட கழிவு வழங்கல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் உழைக்கப்பட்டதா என்பதை பரிசீலித்தல்

மேலே தரப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் எந்த முகாமைத்துவக் கருமத்துக்கு உரித்தானது என்பதனையும் சந்தைப்படுத்தல் கலவையில் எந்த மாறிக்கு உரித்தானது என்பதனையும் வெவ்வேறாகக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(iv) இலங்கை வங்கியில் கணக்குள்ள ராகவியிடமிருந்து ‘பெறுவோன் கணக்கு மட்டும்’ எனக் குறுக்கு கோடிட்ட காசோலையை தனது பெயரில் பெற்ற சாம்பவி அதனை இலங்கை வங்கிக் கருமபீடத்தில் மாற்ற முயன்ற போது கருமபீடத்தில் மாற்ற முடியாது என வங்கி அலுவலரினால் அறிவுறுத்தப்பட்டது.

(அ) கருமபீடத்தில் காசோலையை மாற்ற முடியாமல் போனமைக்கான காரணம் யாது?

(ஆ) அதனை காசாக்க அவருக்கு நீர் கூறும் ஆலோசனை யாது? (2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி 11 (ஆ)

## கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக)**

05) (i) (அ) கணக்கீட்டின் பிரதான நோக்கத்தைக் குறிப்பிடுக.

(ஆ) உரிமையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் விடயங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றிற்கு இரட்டைப் பதிவினை எழுதுக.

(அ) விசாகா தளபாட உற்பத்தி நிறுவனம் கணினி ஒன்றினை $JK$ கம்பனியிடம் ரூ 200000 க்கு கொள்வனவு செய்தது.

(ஆ) மீள் விற்பனைக்கான பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது ரூ 50000

(2 புள்ளிகள்)

(iii) விமலன் பாடசாலைக்குத் தேவையான காகிதாகிப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றினை 01.01.2023 இல் ஆரம்பித்தார். குறிப்பிட்ட வணிகத்தில் ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரம் வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | 01.01.2023 | மூலதனமிட்டது | ரூ | 200000 |
| (b) | 02.01.2023 | தளபாடக் கொள்வனவு | ரூ | 125000 |
| (c) | 03.01.2023 | காகிதாதிப் பொருள் கொள்வனவு | ரூ | 75000 |
| (d) | 05.01.2023 | மின்சாரக் கொடுப்பனவு | ரூ | 3000 |
| (e) | 07.01.2023 | வங்கிக்கடன் பெற்றது | ரூ | 100000 |

தேவைப்படுவது

- ➢ மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதைக் குறிப்பிடுக. (விடையளிப்பதற்கு பின்வரும் மாதிரியைப் பயன்படுத்துக. உமக்காக முதலாவது கொடுக்கல் வாங்கல் செய்து காட்டப்பட்டுள்ளது.

| கொடுக்கல் வாங்கல் | சொத்து = ரூ | உரிமை + ரூ | பொறுப்பு ரூ |
|---|---|---|---|
| a. | 200000 (காசு) | 200000 (மூலதனம்) | – |
| b. | | | |
| c. | | | |
| d. | | | |
| e. | | | |

(4 புள்ளிகள்)

(iv) மாலதி வணிகத்தில் இடம்பெற்ற சில்லறைச் செலவுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு

- சில்லறைக் காசு வசக்கட்டு ரூ 3000
- 2022 ஜனவரி மாதத்தில் சில்லறைச் செலவுகளின் மொத்தப் பெறுமதி ரூ 2750
- 2022 பெப்ரவரி 01 ம் திகதி சில்லறைக் காசு மீள நிரப்பப்பட்டது.

செலவுகள் வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| 03.02.2022 | 001 | ஓட்டோ செலவு | ரூ | 170 |
| 05.02.2022 | 002 | விதுவிற்கு செலுத்திய சம்பள முற்பணம் | ரூ | 350 |
| 12.02.2022 | 003 | பேனா, பென்சில் செலவு | ரூ | 250 |
| 14.02.2022 | 004 | சீனி, தேயிலை செலவு | ரூ | 200 |
| 17.02.2022 | 005 | பேருந்துக் கட்டணம் | ரூ | 225 |
| 19.02.2022 | 006 | 02 பயிற்சிக் கொப்பி | ரூ | 300 |
| 26.02.2022 | 007 | மென்பானச் செலவு | ரூ | 150 |

வேண்டப்படுவது

(அ) போக்குவரத்து, உபசரிப்பு, எழுதுகருவி என்ற பகுப்பாய்வு நிரல்களை உள்ளடக்கிய சில்லறைக் காசேட்டைத் தயாரித்து வசக்கட்டை மீள் நிரப்புக.

(ஆ) பகுப்பாய்வு நிரல்களின் கூட்டுத்தொகையை பேரேட்டுக்கு மாற்றுக. (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

06) (i) (அ) வங்கிக்கூற்று என்றால் என்ன?

(ஆ) காசுக் கழிவின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) ரமணன் என்பவரது புடைவை வணிகத்தின் 2022 செம்ரெம்பர் மாதத்திற்கான கடன் விற்பனைகள் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட்டியல் இலக்கம் | கொள்வன வாளர் | அளவு | ஏனைய தகவல்கள் |
|---|---|---|---|---|
| 10.09.2022 | 102 | பரதன் | ஒவ்வொன்றும் ரூ 500 வீதம் 10 சேர்ட்டுக்கள் | வியாபாரக்கழிவு 10% |
| 22.09.2022 | 103 | நகுலன் | ஒவ்வொன்றும் ரூ 200 வீதம் 100 காற்சட்டைகள் | வியாபாரக்கழிவு 5% |

வேண்டப்படுவது

- விற்பனை நாட்குறிப்பினைத் தயாரிக்குக. (2 புள்ளிகள்)

(iii) விதுரன் வணிகத்திற்கு 31.12.2022 இல் கிடைக்கப்பெற்ற வங்கிக் கூற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு :-

| | | | |
|---|---|---|---|
| 01.12.2022 | செலவு மீதி | ரூ | 20000 |
| வைப்புக்கள் | | | |
| 03.12.2022 | காசு | ரூ | 23000 |
| 08.12.2022 | காசோலை இல. 703312 | ரூ | 21000 |
| 20.12.2022 | நேரடி வைப்பு | ரூ | 45000 |
| கழிப்புக்கள் | | | |
| 05.12.2022 | வாடகை (காசோலை இல. 731301) | ரூ | 6000 |
| 19.12.2022 | மகேசன் (காசோலை இல. 731304) | ரூ | 34000 |
| 27.12.2022 | காசோலை புத்தகக் கட்டணம் | ரூ | 3000 |

வேண்டப்படுவது

- 2022 டிசம்பர் மாத வங்கிக் கூற்றினைத் தயாரிக்குக.
- மேலுள்ள தகவலின் படி வங்கிக் கணக்கை செம்மையாக்கப் பயன்படும் உருப்படிகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

(iv) குலம் வியாபாரியினால் 31.03.2022 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசமாக காணப்பட்ட ரூ 4000 தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

(1) கடன்பட்டோர் மீதி ரூ 2500 இனால் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.

(2) விற்பனைப் பட்டியல் ரூ 8000 ஆனதுவிற்பனை நாளேட்டில் ரூ 800 எனப் பதியப்பட்டிருந்தது.

(3) மின்சாரக் கட்டணமாக செலுத்திய ரூ 1500 காசேட்டில் மட்டுமே பதியப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

(அ) வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(ஆ) தொங்கல் கணக்கு (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

07) (i) (அ) வியாபாரக் கணக்கைத் தயாரிப்பதன் நோக்கம் யாது?

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான இரட்டைப் பதிவை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வணிகமொன்றின் பயிலுநர் கணக்கு எழுதுவினைஞர் தயாரித்த 31.12.2022 இல் உள்ளவாறான தவறுகளுடன் கூடிய ஒரு பரீட்சை மீதி கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 70000 |
| விற்பனைகள் | | 45000 |
| கொள்வனவு | 30000 | |
| தளபாடங்கள் | 20000 | |
| உட்சுமைக்கூலி | 5000 | |
| பற்றுக்கள் | | 1000 |
| பெற்ற வாடகை | 2000 | |
| இயந்திரம் | 30000 | |
| முதலீடுகள் | | 10000 |
| காசு மீதி | 36000 | |
| கடன்கொடுத்தோர் | 15000 | |
| | | |

வேண்டப்படுவது

➢ 2022.03.31 இல் உள்ளவாறான சரியான பரீட்சை மீதியைத் தயாரிக்குக. (2 புள்ளிகள்)

(iii) மாலா வணிகத்தின் 31.12.2022 இல் இருந்தவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 300000 |
| இருப்பு (01.01.2022) | 30000 | |
| காணி கட்டிடம் (கிரயம்) | 200000 | |
| பொறி இயந்திரங்கள் (கிரயம்) | 100000 | |
| கடன்பட்டோர் | 40000 | |
| கடன்கொடுத்தோர் | | 50000 |
| கொள்வனவு | 200000 | |
| விற்பனைகள் | | 250000 |
| மின்சாரக் கட்டணம் | 20000 | |
| காப்புறுதிக்கட்டணம் | 10000 | |
| சம்பளங்கள் | 30000 | |
| பற்றுக்கள் | 5000 | |
| விளம்பரப்படுத்தல் செலவுகள் | 5000 | |
| விநியோகச் செலவுகள் | 14000 | |
| 10% வங்கிக் கடன் | | 70000 |
| வங்கிக் கட்டணம் | 2000 | |
| வங்கிக் கடன் வட்டி | 3000 | |
| காசு மீதி | 11000 | |
| | 670000 | 670000 |

**மேலதிக தகவல்கள்**

(1) 31.12.2022 இல் இறுதியிருப்பு (கிரயத்தில்) ரூ 30000

(2) பொறி இயந்திரங்களுக்கு வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத் தேய்விடுக.

(3) ரூ 3000 பெறுமதியான கடன்பட்டோர் தொகை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது

(அ) 31.12.2022 இல் முடிவுற்ற வருடத்திற்கான இலாபநட்டக் கூற்று (4 புள்ளிகள்)

(ஆ) 31.12.2022 இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று (4 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)